1981 பிப்ரவரி 27]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: 1971—73-ல் ஒரு கைட்லைன்ஸ் தயாரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் கட்டணம் விதிக்கப்படுகிறது. அதில் இருக்கும் குறைபாடுகளைப் பரிசீலனை செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் தான் அரசு அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவது போன்று எங்காவது ஒருவர் வசதிபடைத்தவர் அதிகமாக விலைக்கு வாங்கி அந்த அடிப்படையில் முத்திரைத் தாள் கட்டணம் வசூலிக்கப்படுவது பற்றியெல்லாம் பரிசிலித்து நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யும்.

திரு. என். வரதராஜன்: இந்த முத்திரைத்தாள் கட்டணம் —சாதாரண அரிசன குடிமகன் தன் குடியிருப்புக்காக நிலத்தை வாங்கும்போது பக்கத்தில் தொழிற்சாலைக்கு நிலத்தை வாங்கிய விலைக்கு ஒரு ஏக்கருக்கு ஒரு லட்சம் என்று நிர்ணயித்ததன் அடிப்படையில் இந்தக் குடியிருப்புக்கும் நிர்ணயித்து முத்திரைத் தாள் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இதனை நியாயமான விலையில் முறைப்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: யார் எப்படி நிலத்தை வாங்கினாலும் கைட்லைன்ஸ் அடிப்படையில் கட்டணம் விதிக்கப்படுகிறது. எங்கே தவறு ஏற்பட்டாலும் அதை மறுபரிசீலனை செய்ய அரசு தயாராக இருக்கிறது.

குன்னூர், கோத்தகிரி பகுதியில் வழங்கப் பெற்ற மனைப் பட்டாக்கள்.

*வினா எண் 282—திரு. மு. அரங்கநாதன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குன்னூர், கோத்தகிரி பகுதியில் மனைப்பட்டா வழங்கப் பெற்றவர்களுக்கு இன்னும் நிலம் ஒப்படைக்கப்படாமல் இருப்பது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், குன்னூர் வட்டம், குன்னூர் நகரம், சர்வே எண். 2200/1-இல் வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டவைகளில் 55 நபர்களுக்கு மட்டும் அளந்து ஒப்படை செய்யப்படவில்லை. அவர்களுக்கு இந்நிலத்தில் வீட்டு மனைகள் ஒதுக்க இடம் இல்லாததால், குன்னூர் நகரம் சர்வே எண். 2169-இல் வீட்டு மனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டாக்கள் வழங்கியும் மனை இடம் ஒதுக்கப்படாத காரணத்தால், காலதாமதம் ஆவதை முன்னிட்டு சில பேர்கள் தாங்கள் தான் அந்த பட்டாக்களுக்கு உரிமையாளர்கள் என்று வாதாடக்கூடிய வேடிக்கையான நிலைமைகள் பல இடங்களில் இருக்கின்றன. குறிப்பாக குன்னூர், கோத்தகிரியில் இதுபோல் நடைபெற்று இருப்பதாக தகவல் சொல்லியிருக்கிறார்கள். இதைத் தவிர்ப்பதற்கு உடனடியாக நிவாரணம் காண்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு மனைப் பட்டாக்கள் கொடுப்பதில் இப்போது மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. முதலில் வீட்டு மனைப் பட்டா கொடுக்கிற போது சர்வே நம்பர் போட்டு 10 ஏக்கர், 20 ஏக்கர் என்பதில் 20, 30, 40 பேர்கள் என்று கொடுத்து விடுவார்கள் முன்பெல்லாம். ஆனால் இப்போது அப்படி கொடுக்காமல் வரை படம் போட்டு, நடைபாதை, பொதுக் காரியங்களுக்கு இடம் ஒதுக்கி அந்த வரைபடத்திலே யாருக்கு எந்த நிலம் கொடுக்கப்படுகிறது என்று குறிப்பிட்டு வழங்கப்படுகிறது. பட்டா கொடுத்த மறு நாளே நிலம் அவர்களுக்கு ஒதுக்கப்படுகிறது. இதில் குறைபாடுகள் அரசின் கவனத்திற்கு வந்த பிறகு மறுபரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம்.

திரு. மு. அரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்னூர், கோத்தகிரி, தவிட்டுபுரம் போன்ற இடங்களில் ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகியும் இதுவரைக்கும் நிலத்தை ஒப்படைக்கவில்லை. அரசு அதிகாரிகளின் அலட்சியத்தால் இது ஏற்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். இதில் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, ஐந்து ஆண்டுகளுக்கு முன் என்று சொல்கிறார்கள். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்த குறைபாடுகளை நீக்குவதற்கு அரசு இப்போது நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியானது மனைப் பட்டா வழங்கப்பெற்றவர்களுக்கு இன்னும் நிலம் ஒப்படைக்கப்படாமல் இருக்கிறது என்பதுதான், பல இடங்களில் பட்டா வழங்கிவிட்டு இடம் ஒதுக்கப்படுவதாகவும், வரைபடத்திலே இந்த இந்த இடமென்று தெளிவாகக் குறிப்பிடப்படுவதாகவும் கனம் அமைச்சர் அவர்கள் பதிலில் சொன்னார்கள். ஆனால் இந்த இடம் எங்கே இருக்கிறது என்று பலபேர்கள் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். பட்டா வழங்கப் பெற்றவர்களுக்கு அந்த இடத்தைக் காண்பித்து ஒதுக்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

1981 பிப்ரவரி 27]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, இதிலே இரண்டு பிரச்சினைகள் இருக்கின்றன. இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகு பட்டா, கொடுப்பதில் தவறு இருந்தால் அதை என்னிடத்தில் சொன்னால் நான் உடனே தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு காரணங்களைக் கேட்டு பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். இந்த ஆட்சி வந்த பிறகு, பட்டா கொடுத்தவுடன் வரைபடத்திலே சர்வே நம்பர் போட்டு, நடைபாதை மற்றும் பொதுக் காரியங்களுக்கும் நிலம் ஒதுக்கி இன்றைக்கு ஒப்படைத்து வருகிறோம்.

இதற்கு முன்னால் 1976 ஆம் ஆண்டு எமெர்ஜென்சிபோது பட்டா கொடுத்தபோது ஏற்பட்ட குறைபாடுகள் எங்களுடைய கவனத்திற்கு வந்த பிறகு, நாங்கள் இந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்கிறோம். முன்பெல்லாம் நான்கு ஏக்கர் என்ற இடத்திலே 20 பேர்களுக்கு கொடுக்க வேண்டுமென்றால் 100 பேர்களுக்கு கொடுத்திருப்பார்கள். 20 பேர்கள் தவிர மற்றவர்கள் இடத்தைக் கண்டுபிடிக்க வேண்டும். மீதம் உள்ளவர்களுக்கு நிலம் எங்கே இருக்கிறது என்பதைப் பார்த்து அவர்களுக்குக் கொடுக்கவேண்டும்.

[முற்பகல் 9–10]

திரு. கே. கல்லன்: பேரவைத் தலைவரவர்களே, நீலகிரியைப் பொறுத்தவரையில் பழங்குடியினருக்கும், மற்றவர்களுக்கும் இடைஞ்சலாக அண்மையில் வந்தவர்களுக்கு பட்டா கொடுத்து சீர்கேடுகள் நடந்திருக்கின்றன. ஆகவே, ஐந்தாண்டு பத்தாண்டுகளுக்கு மேலாக அங்கிருப்பவர்களுக்கு — அந்த டைம் பிரஸ்கிரைப் செய்து — கொடுப்பதற்கான யோசனையை அரசு ஏற்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட இடத்திலே எங்கேயாவது தவறு நடந்திருக்கிறது என்றால் அதை நான் கவனிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அங்கேயிருக்கின்ற பழங்குடி மக்களுக்குப் பட்டா கிடைக்கவில்லை, அவர்களுக்குக் கிடைக்குமா என்று கேட்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடி மக்களுக்கும், அதிலே பூர்வீகமாக இருப்பவர்களுக்கும் முதலிடம் தரப்படும். பலபேர்கள் பலயிடங்களிலேயிருந்து வந்தால் அவர்கள் எல்லாம் அகற்றப்படவேண்டும்; உள்ளே அனுமதிக்கக்கூடாது என்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஆணையிடப்பட்டிருக்கிறது.